2010 ஏப்ரல் 23]

82—

சட்டக் கல்லூரி

***75881—திரு. இல. வேலுசாமி:**
திரு. வை. காவேரி:

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

முற்பகல் 10–05

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்றபோது, அந்த நாட்டு மக்களும் சட்டத்தைக் கற்றுணர்ந்து கொண்டால் குற்றங்கள் குறையும். அதேவேளையில் ஆட்சிக்கும் ஒத்துழைப்பாக இருப்பார்கள். அப்படி சட்டத்தைக் கற்றுக்கொள்ள நாட்டில் போதிய சட்டக் கல்லூரிகளைத் தொடங்கி, அதில் மாணவர்களை சட்டம் படிக்க வைத்து, அந்த மாணவர்கள்மூலமாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் என்பது வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களைக் கொண்ட மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாகும். தருமபுரி மாவட்டத்தின் தலைமையிடமான தருமபுரி நகரத்தில் தலைமை குற்றவியல்

[2010 ஏப்ரல் 23

நீதிமன்றம் ஒன்றும், மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஒன்றும், விரைவு நீதிமன்றம் ஒன்றும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தாலுகா தலைமையிடத்தில் 4 இடங்களில் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 500 வழக்கறிஞர்கள் பணியாற்றுகிறார்கள். தருமபுரியில் உள்ள நீதிமன்றங்களில், பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நடைபெறுகின்றன. அந்த இரண்டு மாவட்டங்களில் பயிலக்கூடிய மாணவர்களின் நலன் கருதி, தருமபுரியில் ஒரு அரசு சட்டக் கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காவேரி அவர்கள் சட்டத்தைப் பற்றி, Jurisprudence class எடுப்பதைப்போலவே எடுத்திருக்கிறார்கள். நான் அதிலே மாறுபடுகிறவன் இல்லை. ஆகையினால் வழக்குமன்றங்களிலே வழக்கறிஞர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசின் சார்பில் ஏழு சட்டக் கல்லூரிகளை நாம் நடத்துகிறோம். அதுமட்டுமல்லாமல், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலேயும் மாணவர்கள் படிக்கிறார்கள். தனியார் சட்டக் கல்லூரி ஒன்று சேலத்தில் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஆண்டும், கிட்டத்தட்ட பத்தாயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இப்படிப் படித்துப் படித்து வந்த நிறைய வழக்கறிஞர்கள் வழக்குகள் இல்லாமல் இன்னும் வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் மேலும் unemployment-ஐ legal field–இல் உருவாக்குவது மட்டுமல்ல, இப்போது படிக்க வருகின்ற மாணவர்களுக்குப் போதிய இடம் இருக்கிறது. இந்தக் கல்லூரிகளிலே இடம் கிடைக்கவில்லையென்றால்தான், இருக்கின்ற ஏழு, எட்டுக் கல்லூரிகளிலே இடம் கிடைக்கவில்லையென்றால்தான் வேறு கல்லூரி தொடங்க வேண்டிய நிலை ஏற்படும். இருக்கின்ற கல்லூரிகளிலேயே போதிய மாணவர்கள் வரவில்லை. இப்படித்தான் நாங்களும் போராடி, திரு. சி. ஞானசேகரன் அவர்களும் போராடி, வேலூரில் ஒரு சட்டக் கல்லூரி கொண்டு வந்தோம். ஆனால், அந்தக் கல்லூரியிலே இன்னும் போதிய அளவில் மாணவர்கள் சேரவில்லை. அதுவும் புதிதாகத் தொடங்கப்பட்ட கல்லூரி. எனவே, மாணவர்களுடைய

2010 ஏப்ரல் 23]

சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்துதான் ஒரு கல்லூரி ஆரம்பிப்பதா, இல்லையா என்பதை அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஒரு தனியார் சட்டக் கல்லூரி இயங்கி வருகின்றது. அதில் ஒரு மாணவன் சட்டம் பயின்று வரவேண்டுமானால் மூன்று இலட்சம் ரூபாய் செலவாகின்றது. அதுவே ஒரு மாணவன் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரவேண்டுமென்றால், ரூபாய் 50,000 முதல் ரூபாய் 60,000 வரைதான் செலவாகின்றது. ஆகையினால் இந்த இரு மாவட்டங்களில் உள்ள மாணவர்களுடைய வறுமை நிலையைக் கருதி, அவர்கள் தருமபுரியிலேயே அரசுக் கல்லூரியில் சட்டம் பயின்றால், அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். அங்கே நிலம் வேண்டுமானலும் இருக்கிறது, அங்கே இருக்கின்ற அரசு கலைக் கல்லூரியிலே 48 ஏக்கர் நிலம் இருக்கிறது. வேண்டுமானால் அரசாங்கம் அதில் ஒரு பத்து ஏக்கர் சட்டக் கல்லூரிக்காக எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இங்கே நான் பேசும்போது இரண்டு அமைச்சர்களுக்குள் வாதம் ஏற்படுகின்றது. எப்படி அமைச்சர்கள் இதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, சட்டம் படிக்கின்ற மாணவர்களுக்கு வேலையில்லை என்று சொன்னாலும், ஒரு கிராமத்தில் ஒருவன் சட்டம் படித்திருக்கிறான் என்றால், அந்த மாணவன் கட்டாயமாக மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காவேரி, அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் சட்டக் கல்லூரி குறித்த கேள்வியை மாத்திரம் கேளுங்கள். சட்டம் படித்தவர்கள் நிறைய பேர் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நீங்கள் துணை வினாவை மட்டும் கேளுங்கள்.

திரு. வை. காவேரி: மாணவர்கள் சட்டம் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்றாலும், அந்த மாணவர்கள் கிராமத்தில் இருந்தால், மக்கள் மத்தியில் கொஞ்சம் விழிப்புணர்வு இருக்கும். அந்தவகையில் தருமபுரியில் சட்டக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல், இருக்கின்ற சட்டக் கல்லூரிகளிலே மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை உருவானால்தான், மற்றொரு கல்லூரியைத் தொடங்குவதைப் பற்றி அரசு சிந்திக்கும் என்று தெரிவித்தேன். தருமபுரியைப் பொறுத்தவரையில், பக்கத்தில்தான் வேலூர், அங்கே சட்டக் கல்லூரி இருக்கிறது, சேலத்தில் இருக்கிறது, கோயம்புத்தூரில் இருக்கிறது. எல்லாவற்றையும்விட உங்கள் ஊர் மாணவர்கள் பெரும்பகுதியானவர்கள் குளிர்ச்சியாக பெங்களூருக்குத்தான் போகிறார்கள். ஆகையினாலே தருமபுரியிலே தொடங்கினாலும் அவர்கள் பெங்களூருக்குத்தான் போவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 10—10

2. தகவல் கோரல்

(அ) மூலவினாவையொட்டி துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.*

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் கேள்வி நேரம் என்பது மிக மிக முக்கியமான நேரம். மூலக் கேள்வி கேட்பவர்களுக்கு மட்டும்தான் துணைக் கேள்விக்கு நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதி மறுக்கிறீர்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் காலையிலே எழுந்தவுடனே, என்ன கேள்வி வந்திருக்கிறது என்பதைப் படிப்பதற்கான ஆர்வமே போய்விடும். முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம் என்றிருப்பதில் துணைக் கேள்விகளையும்